29 OCT 2021

<u>சுருக்கம்</u>

அறிவிப்புகள் – 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கைக்கு பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.1,00,000/–லிருந்து ரூ.2,00,000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.50**

**நாள் 25.10.2021**
**பிலவ, ஐப்பசி 8**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (4D) எண்.1, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1)த்துறை, நாள். 28.2.2009.
2. அரசாணை (நிலை) எண் 62, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1)த்துறை, நாள். 30.9.2019.
3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.சி3/3226/2021, நாள் 15.09.2021.
4. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண். பி4/3022/2021, நாள் 15.09.2021.

**ஆணை:**

2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் "பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவியர் சேர்ந்து தங்கிப் பயிலும் வகையில் இவ்விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. ஏற்கனவே, மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளிலும், உணவு மானியம் பெறும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளிலும் மாணவ/மாணவியர் சேர்க்கைக்கு பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.50,000/-லிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

3. இதுதொடர்பான தற்போதைய மானியக் கோரிக்கை அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக பெறப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோரின் கருத்துருக்களில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு நிர்ணயிக்கப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேலாகிவிட்ட நிலையில் இவ்விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கையினை அதிகரித்து, அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் விதமாக பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் மற்றும் உணவு மானியம் பெறும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பினை ரூ.1,00,000/– லிருந்து ரூ.2,00,000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடுமாறு அரசைக் கோரியுள்ளனர்.

4. இக்கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, இத்துறையின் கீழ் இயங்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் மற்றும் உணவு மானியம் பெறும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கைக்கு பெற்றோரது ஆண்டு வருமான வரம்பினை ரூ.1,00,000/-லிருந்து ரூ.2,00,000/- ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை– 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்,
சென்னை– 5.

சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை – 5.
மாநில கணக்காயர், சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை–18. (பெயரில்).
சம்பளக்கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
நிதி (பி.மி.பி மற்றும் சிந)த்துறை, சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்